★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: [illegible]

நம் நாடு

தி.மு.க.தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu". A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: சித்திரை 9௳ சனி (21—4—56) ★ ★ வெளியூர்: சித்திரை 10௳ ஞாயிறு (22—4—56) [இதழ் 265

டி. டி. கே. கூறும் நொண்டிச்சாக்கு

ஹூப்ளி, ஏப். 20—

'நிலக்கரி, மற்றும் மூலப் பொருள்கள் கிடைக்காமையினால், கர்நாடக மாநிலத்தில் கனரகத் தொழில்கள் அமைப்பது சாத்திய மில்லை' என்று மத்திய மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி தெரிவித்திருக்கிறார்.

கர்நாடக வர்த்தகக் கழகத்தில் பேசிய அவர், 'நிலக்கரி மற்றும் மூலப் பொருள்கள் எங்கே கிடைக்கின்றனவோ அங்குதான் கனரகத் தொழில்களை நிறுவது என்பது டில்லி சர்க்காரின் கொள்கை' என்றும் கூறினார்.

சென்னை இராஜ்யம்-'இந்தியாவின் பிணியாளன்'

இந்தியப்பேரரசின் பாசமும்-பகையும்

புதிய மனமாற்றத்திலும் துளி மாசு!

புதிய காதலிலும் சிறுகறை!

பாலக்காடு மாநாட்டிற்குவர சிலோன் கம்யூனிஸ்டுகளுக்குத் தடை!

"சென்ற நாட்களில், பிறநாட்டு பொதுவுடமைக் கட்சியினர்கள் இந்தியாவிற்கு வர அனுமதிக்கப்பட்டிருக்கின்ற பொழுது இப்பொழுது மட்டும் எனக்கு அனுமதி அளிக்க இந்தியப் பேரரசு மறுப்பது, மிகமிக ஆச்சரியமாக இருக்கிறது."

மேற்குறித்துள்ளவாறு, சிலோன் பொதுவுடைமைக் கட்சி மத்தியக் குழு உறுப்பினரான என். சண்முகதாசன் அவர்கள், ஐயம் அறிவித்துள்ளார்.

பாலக்காட்டில் நடைபெற்று வரும் கம்யூனிஸ்டு கட்சி மாநாட்டில் பார்வையாளராகப் பங்கு கொள்ள சிலோன் கம்யூனிஸ்டு கட்சி விழைந்தது.

அதற்காக சிலோன் கம்யூனிஸ்டு கட்சியின் மத்தியக்குழு உறுப்பினரான என். சண்முகதாசன் என்பார், இந்தியாவிற்குவர, அங்குள்ள இந்திய அரசாங்கப் பிரதிநிதியை அனுமதி கோரினார்.

இந்திய அரசாங்கத்தின் ஆணைக்கிணங்க, சிலோன் இந்திய அரசாங்கத் தூதுவர், இந்தியாவர, அவருக்கு அனுமதி தர மறுத்துவிட்டார். அனுமதி மறுப்புக்கான விளக்கம் எதுவும் அந்த அதிகாரி வெளியிடவில்லை.

சென்ற, மதுரை மாநாட்டில், பிரிட்டிஷ் பொதுவுடைமைக் கட்சியின் பொதுச்செயலாளர் ஹரிபொலியட் கலந்து கொண்டதுடன், கொள்கை நிர்மாண விவாதத்திலும் அவர் பங்கு கொண்டார் என்பதும் சிந்திக்கத்தக்கது.

பாலக்காடு மாநாட்டில், இந்திய அரசாங்கம் ஐந்தாண்டுத் திட்டக் கண்காட்சி நடத்துவதும், அது போன்ற கண்காட்சி ஒன்றை சென்னை அரசாங்கம் நடத்துவதும் கருதத்தக்கது.

அதுவுமின்றி, கம்யூனிஸ்டு கட்சி மாநாட்டின் நிகழ்ச்சிகளை, செய்தி நிழல்படமாக்கி மக்களுக்குக் காட்டுவதற்கு இந்தியப் பேரரசு முனைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தியப் பேரரசு—கம்யூனிஸ்டு கட்சி கள்ள உறவு உச்சம் பெற்றுள்ள இந்தத் தருணத்தில்தான், சிலோன் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் ஒருவர், பாலக்காடு மாநாட்டில், வெறும் பார்வையாளராகக் கலந்து கொள்வதும் கூடாது எனத் தடை விதித்திருக்கிறது இந்தியப் பேரரசு! இது என்னப் போக்கோ?

திருவள்ளூர் தொகுதி உபதேர்தல்

காங்கிரஸ் வெற்றிபெற்ற இலட்சணம்!

"வோட்டுப் பதிவானதாகச் சொல்லப்படும் கணக்கில் பாதிப் பேர்கூட வோட்டுச் சாவடிக்கே வரவில்லையாம். ஆனால் வோட்டு மட்டும் போடப்பட்டுள்ளது. இந்த வேடிக்கையை என்னவென்று சொல்வது? அவர்கள் (காங்கிரஸ்காரர்கள்) மேற்கொண்ட தவறான நடவடிக்கைகளை நண்பர்கள் கதை கதையாகச் சொன்னார்கள்."

—'சோஷலிஸ்டு' வார இதழ் 22—4—56

தம்மம்பட்டி தோழர்கள் வழக்கு

மீண்டும் ஒத்திவைப்பு

பிப். 20-ந் தேதி அர்த்தால் சம்மந்தமாக தம்மம்பட்டித் தோழர்கள் 25 பேர்மீது வழக்கு தொடரப்பட்டு, சில வாய்தாக்களுக்குப் பின்னர், மீண்டும் 18-4-56ல் ஆத்தூர் சப்-மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

தோழர்கள் சார்பில் வழக்காட வழக்கறிஞர் செட்டோவும், வழக்கைக் கவனிப்பதற்காக சேலம் மாவட்டச் செயலாளர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்களும் வந்திருந்தனர். மற்றும் ஆத்தூர் செயலாளர் பி. எம். ரங்கசாமி, கே. எஸ். மணி, முல்லைவாடி துணைச் செயலாளர் மா. மணி ஆகியோரும்,

(3-ம் பக்கம் பார்க்க

'பெரிதும் அலட்சியப்படுத்தப்படும் இராஜ்யமும் அதுவேயாகும்'

'நெல்லும் நல்லெண்ணெயும் விலையேறிக் கிடக்கின்றன'

'விலையேற்றத்தால் கிராமப் பகுதிகள் திக்கற்ற நிலையில் இருக்கின்றன'

'விலையைக் கட்டுப்படுத்துவதில் சென்னை ஆட்சிக்கு அக்கறையில்லை'

மக்கள் சபையில் முத்துசாமி வல்லத்தரசு முறையீடு

புதுடெல்லி, ஏப். 20—

"வாழ்வதற்கு இன்றியமையாத் தேவைகளாக உள்ள உணவுப் பொருட்களின் விலை ஏறிக்கொண்டே போகிறது. விலையேற்றத்தைக் கட்டுப்படுத்துவதில் தனக்கு அக்கறை இல்லாதது போலவே அரசாங்கம் நடந்து கொள்ளுகிறது.

"குறிப்பாக, இவ்விலையேற்றத்தின் காரணமாக மிக மிக அலட்சியமாக நடத்தப்படுவதும், 'இந்தியாவின் பிணியாளன்' எனக் கூறத்தக்கதுமான சென்னை இராஜ்யத்தின் கிராமப் பகுதிகளிலிருக்கும் சாதாரண மக்கள் பரிதாப நிலையில் உள்ளனர். அங்கு நெல்லும், நல்லெண்ணெயும் விலையேறிக் கிடக்கின்றன.

"இந்த நெருக்கடியான நிலைக்கு, சென்னை அரசாங்கமும் கூட கண்டனத்துக்குரியதாகும். திரு—கொச்சியிலும், சென்னையிலும் நிலவும் நிலைமையை ஆராய்ந்தறிய, ஒரு உத்தியோகப் பற்றற்றக் குழுவை நியமிக்க இந்திய அரசாங்கம் முன்வரவேண்டும்,"

இவ்வாறு, மக்கள் சபையில், தமிழ் நாட்டு உறுப்பினர் கே. முத்துசாமி வல்லத்தரசு அவர்கள் பேசி இருக்கிறார்.

அவர் மேலும், இதுபற்றி குறிப்பிட்டிருப்பதாவது :—

"விலையேற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்காக, போதுமான அளவு கோதுமையையும், அரிசியையும் இறக்குமதி செய்து, நாட்டுப் பகுதிகளில் விநியோகம் செய்ய வேண்டும். இப்பொருட்களைக் கொள்முதல்செய்வதில், சென்ற முறை அரிசி வாங்குவதால்

திருச்சி மாநாட்டுக்கு சைக்கிளில் வருகை

★

மே 17, 18, 19, 20-ந் தேதிகளில் திருச்சியில் நடைபெறும் மாநில மாநாட்டுக்கு மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, பேராவூரணி, மாயவரம் முதலிய ஊர்களிலிருந்து பெரும்பாலான தோழர்கள் சைக்கிளில் அணிவகுத்து வருவதாக மாநாட்டு அலுவலகத்துக்கு அறிவித்து வருகிறார்கள்.

மறைந்த மாவீரனுக்கு மரியாதை

அண்ணாவின் அன்புப் புகழ்மாலை

நடராசன் நினைவு வாசகசாலை ஆண்டுவிழா

மாயவரம், ஏப். 20—

அந்தக் காலத்தில் சுயமரியாதை இயக்கச் சுடராகவும், உடன்பாடு உடையோருக்கு அருமை அண்ணனாகவும், மாற்றுக் கருத்தினருக்கு மரண பயமாகவும் இருந்துவந்த மாயூரம் மாவீரர் மறைந்த நடராசன் அண்ணனின் சேவையை, தமிழ் மக்கள் என்றும் மறந்துவிட முடியாது. அம்மறக்க முடியாத ஒன்றின் எதிரொலியாக இவ்வாண்டும் நடராசன் நினைவு வாசகசாலையின் ஆண்டுவிழா நடைபெற்று இருக்கிறது. அவ்விழாவில், அருமை அண்ணாவும், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களும், மற்றும் உள்ளூர் தோழர்களும் கலந்து கொண்டு, மறைந்த வீரக் குன்றின் சேவையைப் பாராட்டியும், புகழ்ந்தும் பேசியுள்ளனர்.

20—4—56 காலை 10-மணிக்கு மாயூரம் நடராசன் நினைவு வாசகசாலை ஆண்டுவிழா, வாசகசாலை அலுவலகத்தின் முன் அமைத்திருந்த பந்தலில் சிறப்புற நடந்தேறியது. ஏராளமான பொதுமக்களும், கழகத் தோழர்களும் கலந்து கொண்டனர்.

மாயூரம் நடராசன் அவர்கள், சுயமரியாதை இயக்கக் கொள்கை நாட்டிலே நிலைபெறவும், அதற்காக அவர் ஆற்றிய தூய்மையான தொண்டினையும் விவரித்து, அண்ணா, துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் ஆகியோர் பேசினர்.

தோழர்கள் குடவாசல் கிருஷ்ணமூர்த்தி, தருமன் ஆகியோர் நடராசன் நினைவு வாசகசாலையினர் கடந்த ஆண்டுகளில் செய்த ஆக்க வேலைகளை விவரித்துப் பேசினர்.

செயலாளர் ஆண்டு அறிக்கையை வாசித்தார்.

தோழர் காசிநாதன் அனைவருக்கும் நன்றிகூற பிற்பகல் 1-மணிக்கு விழா இனிது முடிவுற்றது.

அண்ணா அவர்களுக்கும், துணைப் பொதுச்செயலாளர் நடராசன் அவர்களுக்கும் பல கழகங்களின் சார்பில் மலர் மாலைகளும் கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப் பட்டன.

'ஆற்றலும் — பணமும் பாழாவதே மிச்சமாகும்'

அம்பர் சர்க்கா குறித்து மக்கள் சபையில் கண்டனம்

அம்பர் சர்க்கா உற்பத்திக்கு, டில்லி மக்கள் சபையில் பலத்த கண்டனம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அதேபோது, அம்பர் சர்க்காவே, வேலையின்மையைப் போக்க சிறந்த வழி என்றும் பேசப்பட்டதாம்.

பாண்டே என்ற உறுப்பினர் பேசுகையில், 'அம்பர் சர்க்காவை ஆதரிப்பது நாட்டின் ஆற்றலையும், பணத்தையும் பாழடிப்பதாகும்; படித்துவிட்டு வேலையற்றிருக்கும் எவரும் பதினைந்து அணா—என்—அதைவிட குறைந்த கூலிக்கு ஒரு நாளில் எட்டு மணி நேரம் வேலை செய்யமாட்டார்கள்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

புருஷோத்தமதாஸ் தாண்டன், அம்பர் சர்க்காவை ஆதரித்துப் பேசினாராம். அம்பர் சர்க்காவினால்தான் நாட்டின் வேலையின்மையைப் போக்க முடியும் என்று பேசினாராம்.

பர்மாவிற்கு உயர்தபட்ச விலையைக் கொடுத்தது; திரும்பவும் நிகழாதவண்ணம் அரசாங்கம் கவனித்துக் கொள்ளவேண்டும்.

"காமன்வெல்த் கூட்டுறவில் இந்தியா இணைந்திருக்கக்கூடாது. உதவிக்காக பிறநாடுகளை நம்பியிருப்பதைவிட, ஆசியா—ஆப்பிரிக்காவில் கிடைக்கக்கூடிய சாதனங்களை ஒருவருக்கு ஒருவர் உதவிக்கொள்ளும்வகையில் ஒரு திட்டம் வகுக்க முயற்சிக்கக் கூடாது?" என்றும் வல்லத்தரசு அவர்கள் அறிவித்தார்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 21—4—'56 சனி

'அதற்கென்ன, ஆகட்டும்'

'வேலையில்லை — திண்டாடுகிறேன். வாழ முடியவில்லை— வழி செய்யக்கூடாதா, வேலை கிடைக்க ?'

'அதற்கென்ன ; ஆகட்டும், பார்க்கலாம் ?'

'தொழிலாளர்களின் வயிற்றிலடிக்கிறார்கள். சரியான சம்பளம் தருவதில்லை ; வேலை செய்தும், வேதனை குறையவில்லை ; வாழ்க்கை நடத்துவது கடினமாயிருக்கிறது ; கிடைக்கும் வருமானம் கால் வயிறு கஞ்சிக்குத்தான் போதுமானதாயிருக்கிறது ; சம்பள உயர்வு தர மறுக்கிறார்கள் ; சர்க்கார் தலையிட்டு ஆவன செய்ய வேண்டுமா ?'

'அதற்கென்ன ; ஆகட்டும் பார்க்கலாம்.'

இதுபோல, என்ன கேட்டாலும், எது வேண்டுமென கோரினாலும், 'அதற்கென்ன; ஆகட்டும், பார்க்கலாம்' என்று பதிலிறுப்பதையே தொழிலாகக் கொண்டுள்ள இந்த மாநில முதன் மந்திரி இருக்கிறாரே— அவர்தான் காமராசர், இப்போது, தான் ஒரு பெரிய 'அசகாய சூரன்' என்று காட்டிக் கொண்டிருக்கிறார்.

விலைவாசிகள் ஏறிக் கொண்டே செல்கின்றன, வேகமாக ; தேள் கடித்ததும் விஷம் ஏறுவதுபோல!

அரிசி விலை, முன்பு, படி பத்தணா என்றால், இப்போது ஒரு ரூபாய் என்ற நிலைக்கு உயர்ந்து விட்டது. அதுபோலவே, இதர உணவுப் பண்டங்களும் விலை ஏற்றத்திற்கு உள்ளாகியிருக்கின்றன—ஒரு மடங்கு, ஒன்றரை மடங்கு என்ற அளவில்!

இப்படி விலைவாசிகள் ஏறிக் கொண்டே செல்லுமானால், சாதாரண, நடுத்தர, ஏழை—எளிய தொழிலாள—பட்டாளி மக்களின் வாழ்க்கை வெகுவாகப் பாதிக்கப்படும் என்பது சாதாரணமாக எல்லோரும் புரிந்துக் கொள்ளக்கூடியதாகும்.

இந்தக் கோடை வெய்யிலில், கொப்பளித்து நிற்கும் தார் பூசிய சாலையில், முதுகெலும்பு முறிய, கண்விழிகள் பிதுங்க, குருதி வியர்வையாக உடலெங்கும் வழிய, பாரவண்டி ஒன்றை முன்புறமிருந்து மாடுகள்போல இருவர் இழுக்கவும், பின்புறமிருந்து இயந்திரம் போல இருவர் முட்டித் தள்ளிக்கொண்டே செல்லவுமாக பாடுபடுகிறார்களே, அந்த மனிதர்களுக்கு—அதிகமாகப் போனால் ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் கூலி கிடைக்கக்கூடும் ; அந்த ஒரு ரூபாயில் காலம் தள்ளி வந்த அந்தத் தொழிலாளி, ஒரு வேளை மட்டுமே உண்ண முடியும், அந்த நிலையிலிருப்பவர்கள் இந்த விலை உயர்வால் பாதிக்கப்படுகிறார்கள் என்று கூறிட முடியாது, 'பாடுபட்டும் பட்டினி கிடக்கிறார்கள்; பசியாற்ற வழியின்றி, வாழ்வு சிதைக்கப் படுகிறார்கள்' என்று கூறுவது தான் உண்மையாக இருக்க முடியும்.

விலைவாசி ஏற்றம் என்பது— அதுவும், இதுபோல பல மடங்கு ஏற்றம் என்பது, பொறுத்திருந்து பார்த்து, புள்ளி விவரம் சேகரித்து, ஆராய்ச்சி நடத்தி, பரிகாரம் தேடப்பட வேண்டிய சாதாரண பிரச்சினையல்ல ; சாதாரண, நடுத்தர ஏழை மக்களின் அன்றாட—ஏன் ஒவ்வொரு நிமிட வாழ்வையும் பாதிக்கக் கூடிய அவசரமான பரிகாரம் தேடப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

சில நாட்களுக்கு முன்பும் நாம் இதுபற்றி எழுதியிருந்தோம்.

நமது மாநில சர்க்கார், இந்தப் பிரச்சினையின் அவசரத்தை உணர்ந்திருப்பதாகக் கூறமுடியாதபடி இருக்கிறது, அவர்களின் போக்கு!

'விலைவாசிகள் ஏறிக் கொண்டே செல்கின்றனவே, இதைக் கட்டுப்படுத்த என்ன செய்யப்போகிறீர்கள்?' என்று கேள்வி கேட்டால், 'விலைவாசிகள் ஏன் ஏறுகின்றன—எப்படி இந்த ஏற்றம் ஏற்பட்டது என்பதை ஆராயச் சொல்லியிருக்கிறோம்' என்று பதில் தருகிறார், நமது காமராசர்!

'பெருமுதல் போட்டு வாணிபம் நடத்தும் வியாபாரிகள், பேராசையின் விளைவாக, கொள்ளை இலாபம் அடிக்கக் கருதி, உணவுப் பண்டங்களையும், இதரவற்றையும் பதுக்கி வைத்துக் கொண்டதினாலேயே விலைவாசிகள் ஏறிவருவதாக நான் கருதுகிறேன்' என்றும் காமராசர் கூறினாராம்!

மீண்டும் நிருபர்கள், 'ஏறிவரும் விலைவாசியைக் கட்டுப்படுத்த என்ன செய்ய உத்தேசித்திருக்கிறது, சர்க்கார்?' என்று கேட்டார்களாம். அப்போது காமராசர் கூறினாராம்.—'டெல்லியும் விலைவாசி ஏற்றத்தைக் கவனித்து வருகிறது; நாங்களும் கூர்ந்து கவனித்து வருகிறோம்' என்று!

தொடர்ந்து கூறினாராம்— 'அடுத்த அறுவடை நடைபெற்றதும் விலைவாசிகள் தாமாகவே சரியாகிவிடும்'— என்று! எத்தனை விவேகமான, பொறுப்புள்ள பதில் தருகிறார் பார்த்தீர்களா, நமது முதன் மந்திரி!

விலைவாசிகள் ஏறுவதற்கான காரணத்தையும் கண்டுபிடித்தவர்போலக் கூறிவிட்டு அதைத் தடுக்க என்ன வழி என்று கேட்டால், ஜூன் மாதம் வரட்டும் என்கிறாரே, இவரை 'அசகாய சூரர்' என்று தானே அழைக்கவேண்டும்? என்ன செய்வது?

எவருக்குத்தான் தெரியாது, அறுவடையானால் விலை இறங்கி வரும் என்று! இந்தப் பதிலை ஆட்சிப் பொறுப்பின் தலைமையிலிருப்பவரா தர வேண்டும்?

அறுவடைக் காலத்தில் விலை விழ்வதும், அதனால் மக்கள் அவதியுறுவதும் இதரநாட்களில் விலை ஏறுவதும் அதனாலும் மக்கள் அவதியுறுவதுமான நிலை இந்த மாநிலத்தில் தொடர்ந்து ஏற்பட்டு வருகிறது என்று தான் இந்த நிலை மாறுமோ? காமராசர் போன்ற 'அசகாய சூரர்கள்' தொடர்ந்து ஆட்சிப் பொறுப்பிலிருக்கும்வரை, இந்த நிலை மாறாது என்பது உறுதி.

திராவிட நாடுவேண்டுமா வேண்டாமா?

விளக்கம் தெரிந்துகொள்ள மூன்றும் படிவ மாணவர்களை அனுகட்டும்

புரியவில்லை என்று கூறும் காமராசருக்கு ஈ. வெ. கி. சம்பத் யோசனை

சென்னை, பெத்துநாயக்கன்பேட்டையில் நடைபெற்ற கூட்டத்தில், தோழர் சம்பத் நிகழ்த்திய சொற்பொழிவின் கடைசிப் பகுதி கீழே தரப்படுகிறது :—

'தங்களின் கொள்கை, இலட்சியம் என்னவென்று, தி. மு. கழகத்தவர் விளக்கிக் கூறுவதில்லை' என்று காமராசர் அண்மையில் கூறினாராம்.

காமராசரோ, மற்றுமுள்ளவர்களோ, தி. மு. கழகத்தவர் மீது எந்தப் பழியை வேண்டுமானாலும் கூறலாம் ; 'கழகத்திலிருப்பவர்களுக்கு இன்னும், தலைமயிர் நரைக்கவில்லையே' என்று பழி கூறலாம் ; கழகத்தில் ஒரு ஆலை முதலாளிகூட இல்லையே, இது என்ன ஒரு கட்சியா ?' என்று கேட்கலாம்; ஆனால், கழகத்தவர் மீது, 'அவர்கள் தங்கள் இலட்சியம் என்ன என்பதை விளக்குவதில்லை' என்று மட்டும் பழிகூற முடியாது.

உலகத்தில் இன்று, வேறெந்தக் கட்சியைக் காட்டிலும், தி. மு. கழகம்தான், மக்களுடைய அன்றாட வாழ்வுப் பிரச்சினைகளிலிருந்து அவர்களுடைய நீண்ட காலப் பிரச்சினைகள் வரை அலசி ஆராய்ந்து, பிரச்சினைகளுக்கான பரிகாரங்களை மக்களுக்கு விளக்கி வருகிற ஒரே கட்சியாகும்.

நாம் நமது இலட்சியத்தை மட்டும், குருட்டுத்தனமாகக் கூறிவிட்டு, அவற்றை விளக்குவதில்லை என்று எவரேனும் கருதுவார்களேயானால், அது வேண்டுமென்றே சொல்லப்படும் பழியாகும்.

நாம், நமது இலட்சியம், கொள்கை, கோரிக்கைகளுக்கான நியாயங்களை, வேறு எவராலும் முடியாத அளவிற்குத் தொகுத்தெடுத்துச் சொல்லியிருக்கிறோம்; சொல்லி வருகிறோம். என்றாலும், காமராசர், 'திராவிட நாடு என்றால் என்ன என்று எனக்குப் புரியவில்லை,' என்கிறார்.

'திராவிட நாடு என்றால் என்ன? திராவிட நாடு வேண்டுமா? வேண்டாமா?' என்று, இந்த மாநிலத்திலுள்ள பள்ளிகளில் மூன்றாம்—நான்காம் படிவங்களில் பயிலும் மாணவர்களுக்கு ஒரு கட்டுரைப் போட்டி வைத்தால் அவர்கள் அழகான விளக்கங்களை எழுதிக் காட்டுவார்கள் ; வேண்டுமானால் காமராசர், அவர்களை அணுகுகிற முறையில் அணுகிப் பார்க்கட்டும்.

தி. மு. கழகத்தைப் பொறுத்தவரை, திராவிட நாடு ஏன் என்பதற்கான விளக்கம் தரும் வேலையை முடித்துக்கொண்டு அந்த விளக்கம் பெற்றோரை ஒன்று திரட்டி, திராவிட நாடு அடைவதற்கான வேலைகளில் ஈடுபடும் தருவாயிலிருக்கிறது; இந்த நேரத்தில்போய் காமராசர், நம்மிடம் விளக்கம் கேட்கிறார் ; வேடிக்கையாக இருக்கிறது!

காமராசர் சேலம் மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்யும்போது, இடை இடையே கழகத்தைப் பற்றிப் பலப் பல பேசினாராம்.

'இவர்களுக்குப் பொருளாதாரம் தெரியுமா? அரசியல் தெரியுமா?' என்றெல்லாம் கேட்டாராம், இந்த முதன் மந்திரி!

'பொருளாதாரம் தெரியுமா?' என்று கேட்கிறார்.

இன்று, ஐந்தாண்டுத் திட்டம் பற்றி இங்கே உள்ள மந்திரிகள் எல்லோரும் பேசுகிறார்கள் ; அதன் பெருமை அருமைகளை அலசுகிறார்கள் ; ஆனால், முதல் ஐந்தாண்டுத் திட்டம் வெளியானபோது, இந்த மாநில மந்திரிகள் எவரேனும் ஏதேனும் பேசினார்களா என்றால், இல்லை. பழைய பத்திரிகைகளைப் புரட்டிப் பார்த்தால் தெரிய வரும் இந்த உண்மை! ஏன் இவர்கள் அப்போது பேசவில்லை என்றால், இந்த ஐந்தாண்டுத் திட்டம் என்றால் என்ன என்பது எவருக்குமே தெரியாது என்பதால்தான்!

தி. மு. கழகம்தான் ஐந்தாண்டுத் திட்டம் என்ற பெயரில் வடநாட்டு ஏகாதிபத்திய வாதிகள் தங்கள் நாட்டை மேலும் வளப்படுத்திக் கொள்ளவும், தென்னாட்டைத் தேய்த்துவிடவும் திட்டமிட்டிருக்கிற வஞ்சகத்தை ஊருக்கும் உலகத்திற்கும் பறை சாற்றிற்று. முதல் திட்டத்தில், தென்னாடு புறக்கணிக்கப்பட்டிருப்பதை — அலட்சியப்படுத்தப் பட்டிருப்பதை விளக்கிக் காட்டி, வடவரின் ஏகாதிபத்திய நோக்கத்தைச் சாடிற்று. நாட்டைப் பரிபாலிப்பதாக எண்ணிக் கொண்டிருக்கிற சென்னை மாநில மந்திரிகள் எவருக்கும் அது புரிந்தபாடில்லை.

முதல் ஐந்தாண்டுத் திட்ட வஞ்சகம் குறித்த உண்மை நான்காண்டுகளுக்கு பிறகு தான் — திட்டம முடியப் போகும் தருணத்தில்தான் இந்த மாநிலத்து ஆட்சியாளருக்கும், இதர தொழில் நிர்வாகிகளுக்கும் புரிய ஆரம்பித்தது.

அதுவரை, முதல் திட்டத்தில் தென்னாடு புறக்கணிக்கப் படவில்லை என்று சாதித்துக் கொண்டிருந்தவர்கள், நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு—நாம் ஐந்தாண்டுத் திட்ட அக்கிரமத்தை நாட்டு மக்களுக்கு உணர்த்தி, அவர்கள் சர்க்கார் மீது, தாக்குதலைத் துவங்கிய பிறகு—சமாதானம் கூறவந்தார்கள் ; 'முதல் திட்டத்தில் தென்னாடு புறக்கணிக்கப்பட்டு விட்டாலும், இரண்டாம் திட்டத்தில் நியாயம்பெறப் பாடுபடுவோம்' என்று சமாதானம் கூறினார்கள்.

(இங்கு தோழர் சம்பத் அவர்கள் முதல் திட்டத்தின் அம்சங்களை விளக்கி, அதில் தென்னாட்டின் பங்கையும் புள்ளி விவரங்களோடு கூறினார்).

இரண்டாம் திட்டத்திலும் கூட இவர்களின் வாயடி, எந்தவிதப் பலனையும் தந்துவிடவில்லை. ரூ. 400 கோடி கேட்டார்கள் ; கிடைத்தது என்னவோ ரூ. 170 கோடிமட்டும் தான் என்று அவர்களே தெரிவிக்கிறார்கள், அழுகுரலில்!

இதுபோன்ற பொருளாதார விவகாரங்களை, தி. மு. கழகத்தவர் தவிர வேறு எவர், நாட்டு மக்களுக்கு விளக்கிக் கூறினார்கள்—கூறுகிறார்கள் ?

ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது — அநீதிக்கு ஆளாகியிருக்கிறது என்பதை, எங்களது பகைவர்களையும் ஒப்பவைத்திருக்கிறோம், நாங்கள்! ஆட்சி பீடத்திலிருப்போரே உண்மையை உணர்ந்திருக்கிறார்கள் என்றால், அது தி. மு. கழகத்தின் ஐந்தாண்டு கால இடைவிடாப பணி என்பதைத் தவிர வேறு என்ன ?

காமராசர் இவற்றை எல்லாம் தெரிந்து கொள்ளாமலேயே 'இவர்களுக்கு என்ன பொருளாதாரம் தெரியும்?' என்று பேசுவதைக் கேட்டு, நாட்டவர், சிரிக்கத்தான் செய்வார்கள்.

'இவர்களுக்கு என்ன அரசியல் தெரியும்?' என்று வேறு கேட்டாராம், காமராசர் —இவர் என்னவோ அரசியலில் 'அ' முதல் 'ஃ' வரை கற்று முடித்துவிட்டவர்போல எண்ணிக்கொண்டு.

(3-ம் பக்கம் பார்க்க

இணைப்பு எதிர்ப்புக் கிளர்ச்சி

மந்திரிக்குக் கருப்புக் கொடி

ஆர்ப்பாட்டக்காரர்மீது கண்ணீர்ப் புகை பிரயோகம்

பாலூர்காட், ஏப். 19—

வங்கம் — பீகார் இணைப்பை எதிர்த்து இங்குள்ள இடதுசாரிக் கட்சியினர் பெரும் கண்டன ஊர்வலமும், ஆர்ப்பாட்டமும் நடத்திய போது, போலீசார் அவர்களைக் கலைப்பதற்காகக் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்திருக்கின்றனர் என்று தெரிய வருகிறது.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத் துவக்க விழாக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதற்காக கே. என். தாசகுப்தா என்ற மேற்கு வங்க மந்திரி இங்கு வந்த போது, ஆர்ப்பாட்டக்காரர்கள் கருப்புக் கொடிகளுடன் கூடி நின்று ஆர்ப்பாட்டம் செய்திருக்கின்றனர். அந்த ஆர்ப்பாட்டத்தின் போதுதான் போலீசார், போக்குவரத்துத் தடைப்பட்டதாகசாக்குக் கூறிக்கொண்டு கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வெடித்தனராம்.

80-இலட்சம் டாலருக்கு உணவுத் தானியம்

அமெரிக்காவிலிருந்து இந்தியா வாங்கும்

இந்தியாவுக்கு உணவு தானியங்கள் வாங்குவதற்காக 80 இலட்சம் டாலர் புதிய திட்டத்துக்கு அமெரிக்காவின் சர்வதேச ஒத்துழைப்பு நிர்வாகம் அங்கீகாரம் அளித்துள்ளது. ஆகவே இந்த நிதி ஆண்டில், இந்தியாவுக்குக் கோதுமை வாங்குவதற்காக அங்கீகாரம் பெற்றுள்ள மொத்தத் தொகை 1,94,00,000 டாலராகும்.

அமெரிக்காவின் உபரி விவசாயப் பொருட்களுக்கு இந்திய நாணயம் கொடுத்து வாங்குவதற்கு நிதி வசதியளிக்கும் அமெரிக்கச் சட்டப்படி இவை வாங்கப்படும். இந்தியப் பணம் பிறகு பொருளாதாரத் திட்டங்களுக்காக இந்தியாவுக்குக் கடனாக அளிக்கப்படும்.

நடமாடும் பல் வைத்திசாலை

இந்தியாவிற்கு ஜெர்மன் அன்பளிப்பு

புதுடில்லி எப் 18—

ஜெர்மன் குடியரசின் அன்பளிப்பாக இந்தியாவிற்கு டெல்லியில் உள்ள அந்த நாட்டுத் தூதவரான டாக்டர் ஈ டபிள்யூ. டெய்யார் என்பார், நடமாடும் பல் வைத்திய சாலை ஒன்றை டெல்லி சர்க்காரிடம் வழங்கியிருக்கிறார்.

சுகாதார அமைச்சர் இராஜகுமாரி அமிர்த கௌரி இந்திய சர்க்கார் சார்பில், வெலிங்டன் மருத்துவ மனையில் வைத்து அந்த நடமாடும் பல் வைத்தியசாலையைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்.

'கிளினிக் மொபைல்' என்று அழைக்கப்படும் அந்த வைத்தியச் சாலை 2 இலட்சம் ரூபாய் பெறுமானது என்றும், அதில் 'எக்ஸ்ரே' உள்ளிட்ட நவீன பல் வைத்திய சாதனங்கள் அத்தனையும் உண்டென்றும் தெரியவருகிறது.

இந்தியாவில் பால் உற்பத்தி

அதிகரிப்பது பற்றிய விவரங்கள்

சென்னை, எப் 19—

இன்னும் 10 அல்லது 15 ஆண்டுகளுக்குள் இந்தியாவில் பால் உற்பத்தியை இரட்டிப்பாக்கி விட டெல்லி சர்க்கார் திட்டமிட்டிருக்கின்றனராம்.

இதர நாடுகளில் பசுக்கள் ஒரு ஈற்றுக்கு சராசரியாக 3,000 முதல் 4,000 ராத்தல்வரை பால் தரும்போது இந்தியாவில் 1 500 ராத்தல் மட்டுமே சுரக்கின்றன என்று கணக்கிடப்பட்டிருக்கிறதாம்.

இங்கு தலா 5 அவுன்ஸ் பால் தான் சாப்பிட முடிகிறது என்றும், ஆனால் தலா 10 அவுன்ஸ் பால் சாப்பிட்டால்தான் குறைந்த பட்ச நலன் கிட்டும் என்றும் கூறப்படுகிறது.

டெல்லி சர்க்கார், 36 பால் விநியோக சங்கங்களையும், 12 கூட்டுறவு பால் பண்ணைகளையும், 7 பால் பவுடர் கருவித் தொழிற்சாலைகளையும், ஐந்து ஆண்டுகளுக்குள் நிறுவத் திட்டமிட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது.

மின்சாரத் திட்டங்களுக்கு மட்டும் பம்பாய் ரூ. 40 கோடி செலவிடும்

சட்ட சபையில் பெருமிதத்துடன் அறிவிக்கப்படுகிறது

பம்பாய் சர்க்கார், இரண்டாம் திட்ட காலத்தில், மின்சாரத் திட்டங்களுக்காக மட்டும் ரூ.40 கோடி வரை செலவிட உத்தேசித்துள்ளனர். இத்தொகை, மாநிலத் திட்டத்தின் மொத்த மதிப்பீட்டில் 15 சதவிகிதம் என்றும் பம்பாய் பொது மராமத்து மந்திரி சட்ட சபையில் தெரிவித்திருக்கிறார்

'டெல்லி சர்க்கார்கூட, இரண்டாம் திட்டத்தில், மின்சாரத் திட்டங்களுக்காக திட்ட மதிப்பீட்டில் 9 சதவிகிதம் மட்டுமே செலவிடுகின்றனர்; ஆனால் நாம் 15 சதவிகிதம் செலவிடுகிறோம் என்று கூறி, அவர் பெருமிதப்பட்டாராம்!

கொய்னா திட்டத்தை அமுல் செய்ய சுமார் ரூ. 32 கோடி வரை செலவிடப் போவதாகவும், அந்த மந்திரி சட்டசபையில் கூறினாராம்

நீர்வளிக் குண்டு பரிசோதனை நடைபெறுது

ஒத்திவைக்கப்படுவதாக அமெரிக்கா அறிவிப்பு

வரும் மே முதல் தேதியன்று மீண்டும் ஒரு நீரவளிக் குண்டை வெடித்து பரிசோதனை நடத்தப் போவதாக அமெரிக்கா அறிவித்திருந்தது: ஆனால், சில எதிர்பாராத தடைகளாலும், பருவகால மாற்றத்தாலும் அந்தப் பரிசோதனை மே 8-ந் தேதியன்று நடைபெறும் என்றும், ஒருவேளை மேலும் சில நாட்கள் இந்தப் பரிசோதனை ஒத்திவைக்கப்படவும் கூடும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அன்பளிப்பு

தண்ணீரிலும், தலைகீழுமாகச் சைக்கிள் விடும் சாம்பியன் குடவாசல் தோழர் எஸ். சின்னத்தம்பி அவர்களால் குடவாசல் தி. மு. கழகக் கூட்டத்தில் பொதுச்செயலாளர் அவர்கள் வசம் 'நம் நாடு' வளர்ச்சிக்காகத் தரப்பட்ட ரூ. 2 வரப்பெற்றோம்—நன்றி-- பொறுப்பாளர்.

வெளிநாட்டில் வாழும் இந்தியர்

நேரு பண்டிதர் கருத்து

ஐதராபாத், எப். 18—

"வெளிநாடுகளில் சென்று வாழும் இந்தியாவைச் சேர்ந்த ஒவ்வொருவரும், அந்தந்த நாடுகளில் உள்ள இந்தியாவின் தூதுவர்களாவர்."

என்று இங்குள்ள இந்தியர் சங்கங்களின் பிரதிநிதிகள் மாநாடு ஒன்றிற்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில், பிரதமர் நேரு பண்டிதர் குறிப்பிட்டிருக்கிறார் எனத் தெரிகிறது.

"இந்தோனேஷியாவுடன் நாம் நல்ல நட்புறவு கொண்டிருப்பது நமது அதிருஷ்டமாகும். இந்த உறவு நீடிக்கும் என்றும், இரண்டு நாடுகளும் தங்களின் பரஸ்பர நன்மைகளுக்காக, பல வழிகளில் ஒத்துழைக்கும் என்றும் நான் நம்புகிறேன்"

என்றும், கூறிப்பிடுகிறார் நேரு.

தேர்தல் முறை சாதி வெறியை வளர்க்கிறது

காங்கிரஸ் கட்சிச் செயலாளர் குற்றச்சாட்டு

புதுடில்லி, எப். 18—

'இப்போதுள்ள தேர்தல் முறை, சாதீயம், வகுப்புவாதம் இவற்றிற்கு ஆக்கமும் ஊக்கமும் ஊட்டுவதாயுள்ளது.

"ஒரு குறிப்பிட்ட தொகுதியில் வாழும் மக்களில் எத்தனை பேர் ஒரு குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்தவர்கள் என்ற கணக்கின் அடிப்படையில் தாங்கள் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகளைக் கண்டறிந்துதான் ஏறத்தாழ எல்லா அரசியல் கட்சியினரும் அபேட்சகர்களைப் பொறுக்குகிறார்கள். இந்தக் குறுகிய எண்ணங்கள் சில நேரத்தில் உடனடி பலனைத் தரக்கூடியதாகக்கூட இருக்கலாம். ஆனால் முடிவில், இந்திய அரசியல், பொது வாழ்வு பற்றிக் கொண்டுள்ள இந்தக் குறுகிய நோக்கம் இழிவையும், அழிவையும், ஒழுக்கக்கேட்டையும்தான் தேடித் தரும்.

"காங்கிரசும், இதர அரசியல் கட்சிகளும், சாதீய, வகுப்புவாத தீமைகளை ஒழிக்க வேண்டுமென விரும்பினால், அவர்கள் தங்கள் கொள்கைகளை விட்டுக் கொடுக்காமல் சில இடங்களில் தோல்வியை அணைத்துக்கொள்ளவும் தயாராக இருக்க வேண்டும்,"

என்று காங்கிரஸ் கட்சிப் பொதுச் செயலாளரான ஸ்ரீமன்நாராயணன், அகில இந்திய காங்கிரசின் இதழில் எழுதியுள்ள கட்டுரையொன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஈ. வெ. கி. சம்பத் சொற்பொழிவு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் பதவிக்கு வந்தவிதம் என்ன? எப்படி அவர் பதவிக்கு வரமுடிந்தது என்பதை அவரே சிறிது நேரம் சிந்தித்துப் பார்ப்பாரேயானால், நமக்கு அரசியல் தெரியுமா, தெரியாதா என்பது நொடியில் விளங்கிவிடும்.

'நாம் எப்படிப் பதவிக்கு வந்தோம்' என்பது சிந்தித்துப் பார்ப்பதற்கு கஷ்டமானது என்று காமராசர் கருதுவாரானால், ஆச்சாரியார் எப்படி பதவியிலிருந்து விரட்டியடிக்கப்பட்டார் என்பதை அவர் சிந்தித்துப் பார்க்கட்டும்; அப்போது விளங்கும் அவருக்கு, கழகத்தின் அரசியல் ஆற்றல், கழகத்திற்கு அரசியல் சூட்சமம் தெரியுமா என்ற கேள்விக்கு விடை!

எனவே, கனம் காமராசர், இப்படி கழகத்தை பற்றிப் பேசிக்கொண்டிருப்பதைக் காட்டிலும், கழகத்தைச் சமாளிப்பது எப்படி, இவர்கள் எழுப்பும் கொதிப்பிலிருந்து தப்ப எங்கே நிழல் கிடைக்கும். எந்தக் கிளையில் தொத்திக் கொண்டால் பாதுகாப்புக் கிடைக்கும் என்பதை காமராசர் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அது ஒருவேளை அவருக்குப் பலன் தரக் கூடும்.

கழகத்தை ஏசவும், இழித்தும் பழித்தும் பேசவும் ஏன் இந்த மந்திரிகள் இப்படி திடீரென்று கிளம்பிவிட்டார்கள் என்று சிலருக்குக் கேட்கத் தோன்றலாம்.

அவர்கள் இப்படிப் பேசுவதற்குக் காரணம் இல்லாமல் இல்லை.

வாய்தா தீரும் காலம் நெருங்கி வருகிறது; தங்களுக்கு ஆளும் 'லைசென்ஸ்' புதுப்பிக்கப் படுமா என்ற அச்சம் அவர்களை வாட்டுகிறது; வெல்வெட்டு நாற்காலியை விட்டு ஓட நேரிடுமோ என்ற சஞ்சலம் வாட்டுகிறது; உட்கார்ந்து அனுபவித்து விட்டவர்கள் அல்லவா? விட்டுவிடுவது என்றால் சுலபத்தில் முடியுமா? எனவேதான், பேசுகிறார்கள்— பேசட்டும், பேசட்டும்; நன்றுகப் பேசட்டும்!

செய்திச் சுருக்கம்

★

திருவத்திபுரம் புத்தமத வாலிப சங்க துவக்க விழா

6—4—56 இரவு 8 மணிக்கு திரு. எஸ். ஏகாம்பரம் தலைமையில், மேற்படி சங்கம் துவக்கப்பட்டது. 'ஒழுக்கம்' என்பது பற்றி தலைவர் பேசினார்.

புத்தமதக் கொள்கைகளாகிய பஞ்சசீலங்களைப் பற்றி தோழர்கள் ஆர். பழனி, ஹாபீஸ் பேசினர். தோழர்கள் வீ. ரா. விநாயகம், கோ. மு. கண்ணன், அரங்கநாதன், சி. இராமசாமி ஆகியோரும் பல தலைப்புகளில் பேசினர்.

திருமணங்கள்

15—4—56 காலை 6 மணிக்கு திருமங்கலம் தி. மு. கழகத் தோழர் இரா. சௌந்திரபாண்டியன் — தோழியர் புஷ்பம் திருமணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. பின் மணமக்களுக்கு ஏராளமான வாழ்த்துச் செய்திகளும், பரிசுகளும் அனுப்பப்பட்டன. இத் திருமண நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது. வரப் பெற்றோம் — நன்றி — பொறுப்பாளர்.

* * *

விருதம்பட்டு தோழர் கண்ணன் அவர்களுக்கும், தோழியர் தேசிய மணி அம்மையார் அவர்களுக்கும் விருதம்பட்டில் நடந்த திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது, தோழர் ஜி. எம். மணி அவர்கள் மூலமாக வரப்பெற்றோம்—நன்றி —பொறுப்பாளர்.

* * *

கருங்கடல் தோழர் இ. யாக்கோப்பு அவர்களுக்கும்—தோழியர் செல்லமணி அம்மையாருக்கும் 9—3—56ல் திருந்திய திருமணம் நடைபெற்றது. இதன் நினைவாக கிளைக் கழகச் செயலாளர் அவர்கள் மூலமாக 'நம் நாடு' வளர்ச்சிக்கருதி ரூ. 1 அன்பளிக்கப்பட்டது. வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

* * *

15—4—56 காலை 9 மணிக்குப் புதுவைக்கடுத்த பூரணாங்குப்பத்தில், சுந்தரராசு — குப்பம்மாள் திருமணம், தோழர் ச. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது. திருமணத்தைப் பாராட்டித் தோழர் கோ. பாண்டியன் பேசினார்.

****

திராவிட வரலாற்றில் ஒரு திருப்புமுனை!

★ திராவிடம் வளம் பெறவும்

★ திராவிடர் நலம் பெறவும்

★ அதற்கான திட்டம் தீட்டி செயல்படுத்தவும்

மே 17, 18, 19, 20 தேதிகளில்

திருச்சி

பந்தயத் திடலில்

('ரேஸ் கோர்ஸ்' ஜமால் முகம்மது கல்லூரி அருகில்)

தி. மு. கழக 2-வது

மாநில மாநாடு

நடைபெறும்

★

பொதுச் செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

தி. மு. கழகச் சொற்பொழிவாளர்கள் அனைவரும்

நாட்டு விடுதலை குறித்து நல்லுரை ஆற்றுவர்

★

எழுச்சியூட்டும் நாடகங்கள்—இன்னிசை விருந்து—

ஓவியக் காட்சி ஆகிய சிறப்புகளும் உண்டு

★

திரண்டு வாரீர் தோழர்களே!

—வரவேற்புக் குழு

****

மாநில மாநாடு

பிரதிநிதிகள் தேர்வு

மே 17, 18, 19, 20-ந் தேதிகளில் திருச்சியில் நடைபெறவிருக்கும் தி. மு. கழக 2-வது மாநில மாநாட்டிற்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பது குறித்துக் கீழ்க்கண்ட விளக்கம் தரப்படுகிறது:—

ஒவ்வொரு கிளைக் கழகங்களிலிருந்தும், செயலாளர், மற்றுமொரு உறுப்பினர் ஆக இருவர் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

மாவட்டக் குழுக்களைப் பொறுத்தவரையில், அதன் எல்லா உறுப்பினர்களுமே பிரதிநிதிகளாகக் கலந்துகொள்ளும் உரிமை பெற்றவர்களாவர்.

பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் வரவேற்புக் குழு உறுப்பினர்களாகவும், பிரதிநிதிகளாகவும் கலந்து கொள்ளும் உரிமை பெற்றுள்ளனர்.

எனவே, இவ்விளக்கத்திற்கேற்ப எல்லாக் கிளைகளும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து, அதன் விவரத்தையும், பிரதிநிதி ஒவ்வொருவருக்கும் ஐந்து ரூபாய் விதம் கட்டணமும் கிளைக் கழகச் செயலாளர் கையொப்பமுடன், ஏப்ரல் மாதம் இறுதிக்குள், 'தோழர் அம்பில் தர்மலிங்கம், வரவேற்புக் குழுத் தலைவர், தி. மு. க. மாநில மாநாடு, 9, கிலேதார் தெரு தெப்பக்குளம், திருச்சி' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

'அறிவகம்'
சென்னை-13
11—4—56

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

****

(கு)ம்பமேளா விளைவித்த கோரம்

பலியானோரின் நகைகள் ஏலத்திற்குவருகின்றன

அலகாபாத், ஏப். 19—

1954-ல் நடைபெற்ற கும்பமேளா கோரத் திருவிழாவின்போது போலீசாரால் கைப்பற்றப்பட்ட தங்க, வெள்ளி ஆபரணங்களை வரும் மே 15-ந் தேதியன்று, அலகாபாத் நகர நீதிபதி ஏலமிடுவார் என்று அறிவிக்கப்படுகிறது.

இந்த ஆபரணங்களின் மதிப்பு எவ்வளவு என்பது தெரியவில்லையாம். ஆனாலும், சில உயர்ந்த ரகக் கற்கள் பதிப்பிக்கப்பட்ட நகைகளும் இருக்கின்றனவாம்.

இந்த ஆபரணங்கள், கும்பமேளாவில் நசுங்கி உயிர்விட்டவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டதாம்.

1954 பிப்ரவரி 4-ந் தேதியன்று, நடைபெற்ற கும்பமேளாவில், பெருங்கூட்டத்தினால் மிதிபட்டு 400 பேர் வரை உயிரிழந்தனர் என்பது நினைவிலிருக்கலாம்.

தம்மம்பட்டி வழக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏராளமான பொது மக்களும், தோழர்களும் நீதி மன்றத்தில் நிறைந்திருந்தனர்.

மீண்டும் வழக்கு 20-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

* * *

குற்றப்பட்டியலிலிருந்து 9 தோழர்கள் நீக்கம்

மீண்டும் வழக்கு 20—4—56ல் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

25 தோழர்களில், கீழ்க்கண்ட ஒன்பது தோழர்கள் எவ்வித விசாரணையுமின்றி, குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டு விட்டனர்.

எஞ்சிய பதினாறு தோழர்களில் ராமலிங்கம் என்பவர் சேலம் அரசாங்க மருத்துவமனையில் ஈண்டும் சிகிச்சைப் பெற்று வருகிறார்.

வழக்கு, இ. பி. கோ. 109, 143, 145 ஆகிய பிரிவுகளின் கீழ் பதிவு செய்யப்பட்டு, மீண்டும் 25-4-56ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இன்றைய வழக்கிற்கு தோழர்கள் பி. எம். ரங்கசாமி, மா. மணி, கே. எஸ். மணி, வி. எஸ். ராமசாமி ஆகியோரும், மற்றும் இயக்கத் தோழர்களும், பொதுமக்களும் வந்திருந்தனர்.

25—4—56ல் நடைபெறும் விசாரணையின்போது அரசாங்க சார்புடைய சாட்சிகள் விசாரிக்கப்படுவர். அன்றைய வழக்கிற்கு வழக்கறிஞர் நெட்டோ அவர்கள் வருவார்.

விடுவிக்கப்பட்ட தோழர்கள் :— கூடமலை தி மு. க. தோழர்களான எம். வெங்கடாசலம், வி. மாணிக்கம், பூ. கஞ்சமலை, சி. கிருட்டிணன், சிங்காரம், சி. துரைசாமி, தம்பன், ஜம்புலிங்கம் (சோ ; செந்தாரப்பட்டி) ; ராஜு (சோ ; தம்மம்பட்டி.)

* * *

தாண்டானூர் தோழர்கள் வழக்கு

பிப். 20 அர்த்தால் சம்பந்தமாக தாண்டானூர்த் தோழர்கள் துளசி, மாணிக்கம் ஆகியோர்கள் மீது தொடரப்பட்டுள்ள வழக்கு இரண்டு மூன்று முறை தள்ளி வைக்கப்பட்டது ; 20-4-56-ல் வழக்கு நடைபெற்றது. 25-ந்தேதியன்று, சாட்சிகள் விசாரிக்கப்படுவார்கள் என்று நீதிபதி அறிவித்தார். வழக்கு 25-ந் தேதி நடைபெற இருக்கிறது.

80 இலட்சம் ரூபாய் மூலதனத்தில்!

இந்தியாவில் 'டெலிபிரிண்டர்' உற்பத்திச்சாலையாம்

புதுடில்லி, ஏப். 16—

"'டெலிபிரிண்டர்' உற்பத்திச்சாலை ஒன்றை ரூ. 80 இலட்சம் மூலதனத்துடன் துவக்க தந்தி—தபால் இலாகா முடிவு செய்துள்ளது. எங்கு இத் தொழிற்சாலையை ஏற்படுத்துவதென்பது பற்றி முடிவு செய்யவில்லை. இத்தொழிற்சாலை அமைக்க 'டெலிபிரிண்டர்' இயந்திரங்களை உற்பத்தி செய்யும் அந்நியக் கம்பெனி உதவும். துவக்கத்தில் ஆண்டொன்றுக்கு 500 'டெலிபிரிண்டர்'களை உற்பத்தி செய்யும் இந்திய அரசியலாரின் சீமன் கம்பெனி உள்பட பல அந்நிய 'டெலிபிரிண்டர்' உற்பத்தி கம்பெனிகளுடன் தொழில்நுட்ப சம்பந்தமாக ஒப்பந்தம் பேசிவருகின்றனர்" என்று மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாங்கி முதலாளிகள் சம்மதித்தனராம்!

1956 ஏப்ரல் திங்களிலும் அதன் பின்னரும் பாங்கித் தொழிலாளர்கள் சம்பளத்தில் மேலும் வெட்டு ஏற்படுத்தாமலிருக்க பாங்கி முதலாளிகள் பொதுவாக சம்மதம் தெரிவித்திருப்பதாகத் தொழிலாளர் அமைச்சர் கந்துபாய் தேசாய் மக்கள்சபையில் தெரிவித்துள்ளார்.

கிராமத் தபால்காரருக்கு சைக்கிள் கிடையாது!

'கிராமத் தபால்காரர்களுக்கு 'சைகிள்' வழங்கும் எண்ணம் அரசினருக்கு கிடையாது' என தபால்—போக்குவரத்து அமைச்சர் ராஜ்பகதூர் மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

'சைக்கிள்' வேண்டுவோருக்கு கடன் கொடுக்கப்படு மென்றும், இயன்ற நேரங்களில் 'மெயில் ரன்னர்'களுக்குப்பதில் 'பஸ் சர்வீஸ்' ஏற்படுத்துவதுதான் நோக்கம் என்றும் அவர் அறிவித்திருக்கிறார்.

மரண தண்டனை ஒழிப்பு

இலங்கை சர்க்கார் நிலை

கொழும்பு, ஏப். 19—

மரண தண்டனைத் தீர்ப்பை 3 ஆண்டுகளுக்கு முதலில் ரத்து செய்து பார்க்க இலங்கை சர்க்கார் தீர்மானித்துள்ளது. மூன்றாண்டு நடைமுறைக் காலத்துக்குப் பின் மரண தண்டனையையே ஒழித்து விடுவதுபற்றி சர்க்கார் ஆலோசிக்குமாம்.

தூக்குமேடை ஏற இருந்த 19 குற்றவாளிகள் மரண தண்டனையை அரசினர் ரத்து செய்ததின் விளைவாக வாழ்வு பெறுகின்றனராம்.

சொற்பயிற்சிக் கூட்டம்

22—4—57 காலை 9 மணிக்கு, சென்னை—வண்ணை இளங்கோ கலைமன்றம் சார்பில், திரு. க. கணேசன் தலைமையில், 'உலகத்தில் புத்தர்' என்ற பொருள்பற்றி தோழர் வே. கோ. மோகன் பேசுவார்.

தி. மு. கிளைக் கழகச் செயலாளர்கட்கு:

மே 17, 18, 19, 20-ந் தேதிகளில் திருச்சியில் நடைபெறும் மாநில மாநாட்டுக்கு வரும் கிளைக் கழகங்கள் ஒவ்வொன்றும், தங்கள் கிளைக் கழகத்தின் பெயர் பொறித்த கொடிகளைத் தயார் செய்து கொண்டு வரவேண்டும்.

ஒவ்வொரு மாவட்டக் கழகங்களும் '$1\frac{1}{2}' \times 10'$' அளவில் மாவட்டத்தின் பெயர் பொறித்த 'பேனர்' ஒன்று கொண்டுவர வேண்டும்.

தோழமைக் கழக-இளைஞர் நாடக மன்ற-திறப்பு விழா பொதுக்கூட்டம்

23—4—56 மாலை 6 மணிக்கு, சென்னை 40-வது வட்டம்—சேப்பாக்கம் (டாக்டர் சி. நடேசன் நகர்), பார்த்தசாரதி நாயுடு தெருவில், தோழர் என். வி. நடராசன் தலைமையில் மேற்படி பொதுக்கூட்டம் நடைபெறும்.

திரு. பி.டி. இராசன் எம்.எல்.ஏ., பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் பேசுவர்.

திரு. வி. க. மறுமலர்ச்சி மன்ற பொதுக்கூட்டம்

21—4—56 மாலை 6 மணிக்கு குயப்பேட்டை (24-வது வட்டம்) எட்வர்டு பார்க் தெருவில் நடைபெறும். தோழர் ந. கோவிந்தன் தலைமை தாங்குவார். தோழர்கள் இரா. சு. தங்கப்பழம், காஞ்சி-கல்யாணசுந்தரம், தோழியர் சத்தியவாணி முத்து, தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் ஆகியோர் பேசுவர்.

★

வானொலியில்!

24—4—56 இரவு 7-30 மணிக்கு, க. அன்பழகன் அவர்கள் 'புத்தர்வழி தத்துவமும் இலக்கியமும்' என்னும் பொருள் பற்றிப் பேசுவார். சென்னை—திருச்சி வானொலிகளில் ஒலிபரப்பப்படும்.

வி. வி. டி. நினைவு ஆரம்ப பள்ளி திறப்பு விழா

23—4—56 மாலை 6 மணிக்கு, தூத்துக்குடி —ஆரோக்கியபுரம் எஸ். எம் எஸ். மாளிகையில், வி. வி. டி. நினைவு ஆரம்பப் பள்ளியை தோழர் மு. கருணாநிதி திறந்துவைப்பார். நகர மன்ற தலைவர் எம். மாசிலாமணி தலைமை தாங்குவார்.

மதுரையில் முத்தமிழ் மன்ற திறப்பு விழா

மதுரை, 77, பாரதியார் தெரு தொகுதி எண். 9-ல், மேற்படி மன்றத் திறப்பு விழா 22—4—56 மாலை 4 மணியளவில், தோழர் எஸ். முத்து தலைமையில், தோழர் மு. கருணாநிதி முன்னிலையில் நடைபெறும்.

சிலம்பு நாடக மன்றம் அளிக்கும் சிந்தனை நாடகம்

22—4—1956 ஞாயிறு மாலை 6–30 மணிக்கு

சென்னை-ஒற்றைவாடை தியேட்டரில்

அண்ணாதுரை

தலைமையில்

பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை எழுதிய

காற்றும்-மழையும்

வசனம்: இரா. மணிவேந்தன்—பாடல்கள்: கண்ணதாசன்

கவிஞர் கண்ணதாசன், வளையாபதி முத்துகிருட்டிணன், எஸ். எஸ். பி. லிங்கம், கே. எம். கண்ணபிரான், வனிதா, காந்தா, மல்லிகா ஆகியோர் நடிக்கின்றனர்

கட்டணம்: ரூ. 3, 2, 1, அணா 8.

—என். கிருஷ்ணன்—செயலாளர்.

கழகக் கூட்டங்கள்

★

நெடுங்குளம் :

24—4—56 மாலை 6 மணிக்கு

தலைவர்: நிரவி-இரத்தினவேலு

பேசுவோர்:
என். வி. நடராசன்
என். கிட்டப்பா
கே. எஸ். சௌந்தரராசன்

★

சிருவந்தாடு:

22—4—56 மாலை 6 மணிக்கு

தலைவர்: ஏ. கிருஷ்ணமூர்த்தி

பேசுபவர்: இளம்பரிதி

★

எழுவாம்பட்டி:
(மந்தவெளியில்)

24—4—56 மாலை 6 மணிக்கு

தலைவர்: பி. ஜி. கிருட்டிணசாமி

பேசுவோர்:
அண்ணா
ப. உ. சண்முகம்
கே. சுப்பிரமணியம்
மு. வரதராசன்

இரவு 10 மணிக்கு, இவ்வூர் இளைஞர் நாடக மன்றத்தினரால் 'ஏழையின் வெற்றி' என்ற நாடகம் நடைபெறும்.

★

குணியமுத்தூர் :

மாரியம்மன் கோயில் திடலில்

22—4—56 மாலை 6 மணிக்கு

பேசுவோர்:
சிற்றுளி-சுப்ரமணியம்
சே. அ. இராசமாணிக்கம்
தங்கமாணிக்கம்

சென்னை 11-வது வட்ட தி.மு.க. செயற்குழு உறுப்பினர்களுக்கு:

22—4—56 காலை 10 மணியளவில், மேற்படி வட்ட கழகச் செயற்குழுக் கூட்டம், 4/88-ஏ, பிராட்வே ரோடில் உள்ள கழகப் பணிமனையில் நடைபெறும். அதுபோது, மாநில மாநாட்டுப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பது ஆய்வுக்கு வரும்.

குடந்தை நகர தி. மு. கழகத் தோழர்களுக்கு:

22—4—56 காலை 9 மணியளவில், குடந்தை நகர தி. மு. கழக உறுப்பினர் கூட்டம், அண்ணா அரண்மனையில் நடைபெறும். அதுபோது, மாநில மாநாட்டிற்குப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுப்பது ஆய்வுக்கு வரும்.

கரூர் நகர தி. மு. கழகத் தோழர்களுக்கு:

திருச்சியில் நடைபெறும் மாநில மாநாட்டிற்குத் தொண்டர் படையில் சேர்ந்து பணியாற்ற விரும்பும் தோழர்கள், மாவட்ட பிரதிநிதி தோழர் சங்கப் பிள்ளை அவர்களிடம் 30-4-56-ந் தேதிக்குள் பெயர்களைப்பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

எஸ். சிதம்பரம் — மீனாட்சி திருமணம்

23—4—56 காலை 6 மணியளவில், கரூர் வ. உ. சி. உணவு விடுதி உரிமையாளர் தோழர் எஸ். சிதம்பரம் — தோழியர் மீனாட்சி திருமணம், கரூருக்கு வடக்கே 2-வது மைல் தொலைவிலுள்ள வெண்ணெய்மலையில் நடைபெறும். கழகத் தோழர்கள் இதனையே அழைப்பாக ஏற்று, வருகை தருமாறு கோரப் படுகிறார்கள்.

இத்திருமணத்தின் நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 5 அன்பளிப்பாகத் தரப்பட்டது—வரப் பெற்றோம் — நன்றி — பொறுப்பாளர்.

நூலை நகர இளைஞர் கழகம்

22—4—56 காலை 9 மணிக்கு, திரு. ஆதி. தேவநாதன் தலைமையில் குருசேடிபுரத்தில் இலவசமாகப் பால் வழங்கப்படும்.

வண்ணையம்பதி தமிழ் இளைஞர் கழகம்

22—4—56 காலை 10 மணிக்கு, தனலட்சுமி உயர்தர ஆரம்பப் பாடசாலையில் உள்ள சம்பந்தம் விளையாட்டு மன்றத்தில், சர் தியாகராய கல்லூரி முதல்வர் திரு எம். கே. சண்முகம் தலைமையில், திரு. டி. எஸ். உமாபதி திருக்குறள் சொற்பொழிவு துவக்கிவைப்பார்.

முத்தமிழ் கலைமன்றம் பரிசளிப்பு விழா

இராயபுரம் முத்தமிழ் கலைமன்றத்தார் நடத்திய 'காரம்' விளையாட்டுப் போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா 21—4—56 மாலை 6 மணிக்கு மன்ற கட்டிடத்தில் நடைபெறும் தோழர் ஜே. கோதண்டராமன் பரிசுகளை வழங்குவார்.

சென்னை — வண்ணை கே. எஸ். பாண்டியன் பகுத்தறிவு படிப்பகம்

22—4—56 இரவு 9 மணிக்கு படிப்பகப் பணிமனையில், செயற்குழுக் கூட்டம், தோழர் செ. பாண்டியன் தலைமையில் நடைபெறும்.

குளித்தலை வட்டம்-புதுப்பாளையம் மாணவர் மன்றம்

23—4—56 இரவு 9 மணிக்கு, பிள்ளையார் கோவில் முன்பு, மேற்படி மன்றச் சார்பில், டாக்டர் எஸ். வி. நாகமாணிக்கம் தலைமையில், 'நாடும்—நாடகமும்' என்ற தலைப்பில், தோழர் மீ. சு. இளமுருகு-பொற்செல்வி, தோழியர் பொற்செல்வி-இளமுருகு பேசுவர். பின்னர் மாணவர் மன்றத்தினரால், 'வாழ்வு எதற்கு?' என்ற நாடகம் நடைபெறும்.

அந்தமானுக்கு கேரளக் குடும்பங்கள்

தென்னாட்டிற்கு ஏற்பட்டுள்ள அவல நிலை

திருவனந்தபுரம், ஏப். 20—

திரு—கொச்சியின் பல பாகங்களிலிருந்துமாக 70 குடும்பங்கள், அந்தமானில் குடியேறுவதற்காக சென்னையிலிருந்து கப்பலேறுவர் என்று தெரியவருகிறது.

திரு—கொச்சியிலிருந்து குடும்பங்கள், அந்தமான் செல்வது இது மூன்றாம் முறையாகும். மேலும் திரு—கொச்சிக் குடும்பங்கள் சில, போபால் மாநிலம் சென்று குடியேறியிருப்பதும் நினைவிலிருக்கலாம்.

அந்தமான் குடியேற்றத் திட்டத்தின்கீழ் திரு—கொச்சிக் குடும்பங்கள் செல்கின்றன.

'தமிழகத்திலிருந்தும், ஆட்கள் வருக' என்று, சென்னை சர்க்காரே சில நாட்களுக்கு முன்பு ஆசை வார்த்தைகள் கூறியது நினைவிலிருக்கலாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.